## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி 2013

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1997 இன் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் 26(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 அழுத்தியுரைப்பதற்கான விடயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் வைப்புக்களில் 42 சதவீதத்திற்கும் மேற்பட்டவை 20 வைப்பாளர்களிற்கு உடமையாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 47 சதவீதமாகக் காணப்பட்டமையானது வங்கி ஒருசில வைப்பாளர்களில் தங்கியுள்ளமையையும் அதிகூடிய திரவத்தன்மை ஆபத்தையும் வெளிப்படுத்தியது. மேலும், இந்நிலமை வங்கியின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீள்நிதியளிப்பு கடன் மீதிகள் தொடர்பில் பொதுப் பேரேட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகளிற்கும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து (சீபீஎஸ்எல்) பெறப்பட்டிருந்த உறுதிப்படுத்தல்களிற்குமிடையே பின்வரும் வேறுபாடுகள் இனங்காணப்பட்டன.

| விபரம் | பேரேட்டுக் கணக்குகளின் படி மீதி | சீபீஎஸ்எல் இன் உறுதிப்படுத்தலின் படி மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஐக்கிய அரசு உதவி (யூஎஸ்ஏஐடீ) | 5,080,499 | 129,467 | 4,951,032 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி II (ஏடீபீ II) | 65,568,497 | 34,189,201 | 31,379,296 |

### 2.2.3 இனங்காணப்படாத வைப்புக்கள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 3,054,126 தொகையான இனங்காணப்படாத வைப்புக்கள் வருமானமாக கருதப்பட்டு நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களையும் மேற்கொள்ளாது மீளாய்வாண்டிற்கான சில்லறை வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.2.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரேரிக்கப்பட்ட வருமான மூலங்களும் கட்டணங்களும்

2013 செப்தெம்பர் 26 மற்றும் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதிகளில் கூடிய வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பணிப்பாளர் சபை 2012 சனவரி 01 முதல் அமுலாகும் விதத்தில் நிலுவையான ஒவ்வொரு கடனின் மீதும் கடன் நிர்வாகக் கட்டணம் என்ற புதிய வருமான மூலத்தினை சாட்டுதல் செய்வதற்கு அங்கீகரித்திருந்தது. அதன்படி, ரூபா 88,382,116 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறாத கடன் நிர்வாகக் கட்டணம் ரூபா 48,736,213 ஆக காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

மேலும், இந்த நடவடிக்கை 2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1997 இன் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியானது சமூகத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டோரிற்கு வீடுகளை வழங்குவதற்கான திட்டங்களை உருவாக்கி அமுலாக்குதல் வேண்டும் என்ற தொழிற்பாட்டிற்கு முரணாக காணப்பட்டது என்று அவதானிக்கப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள மீதிகளிற்கு எதிராக வழங்கப்பட்டிருந்த ‘‘சிரம உதான கடன்கள்’’ தொடர்பில் வாடிக்கையாளர்களிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படாது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து கடன் நிர்வாகக் கட்டணமாக ரூபா 46,541,725 தொகையை வங்கி அறவிட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பதவியினர் மிகையூதியம்**

2012 ஆம் ஆண்டிற்காக வங்கி அதன் ஊழியர்களிற்கு பதவியினர் மிகையூதியம் செலுத்தியிருக்கவில்லை. மாறாக, இந்நோக்கத்திற்காக ரூபா 22,201,113 தொகையான ‘‘விசேட பதவியினர் கடன்’’ வசதியொன்றை வங்கி வழங்கியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான நட்டத்தின் அதிகரிப்பைத் தவிர்ப்பதற்காக ‘‘விசேட பதவியினர் கடனின்’’ கீழ் சொத்தொன்றாக கணக்கீடு

செய்திருந்தது. இருப்பினும், வங்கி மேற்குறிப்பிட்ட ''விசேட பதவியினர் கடனை'' தீர்ப்பனவு செய்யும் நோக்கில் ரூபா 23,026,123 தொகையான மேலதிக பதவியினர் மிகையூதியத்தை 2013 ஆம் ஆண்டில் வழங்கியிருந்தது. ஆகையால், அதே தொகையால் மேலதிகச் செலவினமொன்று வங்கிக்கு ஏற்பட்டிருந்தது

**(இ) ''ரீ – சேட்கள்'' கொள்வனவு செய்தல்**

2012 ஆம் ஆண்டில் 1860 ''ரீ – சேட்கள்'' வழங்கப்படுவதற்கான ரூபா 995,100 பெறுமதியான கேள்வி தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் வழங்குனர் ''ரீ – சேட்கள்'' விநியோகப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முற்பணமாக 2012 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரையப்பட்டிருந்த ரூபா 497,550 பெறுமதியான காசோலை வழங்குனருக்கு கையளிக்கப்படாது ஏறத்தாழ 06 மாதங்களாக நிர்வாகப் பிரிவில் வைத்திருக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 2013 மார்ச் 21 இல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) வழங்குனரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறியொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதிய எமது பௌதீக பரிசோதனையில் கொள்வனவு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரியில் அவ்வாறானதோர் நிறுவனம் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது வங்கியின் பதிவுசெய்யப்பட்ட வழங்குனராகவும் காணப்படவில்லை. இருப்பினும், தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையால் பதிவுசெய்யப்பட்ட வழங்குனராகும் என்ற தகவல் வழங்கப்பட்டு கொள்வனவுச் சபை தவறாக வழிநடாத்தப்பட்டிருந்தது.

**(ஈ) முதலீட்டு ஆதனம்**

(i) இல. 441, சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள 59.20 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணி, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 53,081,000 மற்றும் ரூபா 6,120,000 மிகைகளுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 18 ஆந்

திகதிய வங்கியின் மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையின் படி, வடிகால் மற்றும் கழிவுக் கால்வாய்கள் இக் காணியினை ஊடறுத்துச் செல்வதனால் அதன் மொத்த திறந்த சந்தைப் பெறுமதியும் தேறப்படுவதில் சில சட்டரீதியான வரையறைகள் காணப்படுகின்றது.

(ii) கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இல. 192, சிரீமத் பண்டாரநாயக்கா மாவத்தையில் அமைந்துள்ள 138.20 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட இரண்டு காணிகள், 2012 ஆம் ஆண்டில் மீள் மீள்மதிப்பீட்டுக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஆதனம் 2013 ஆம் ஆண்டில் ரூபா 145,112,000 மிகையுடன் ரூபா 504,430,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் இக் குறிப்பிட்ட ஆதனத்தினை உடமையாக்குவதற்கு 2007 இல் வங்கி கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தது. மேற்படி வழக்கின் தீர்ப்பு வங்கிக்கு சாதகமாக 2012 ஒக்தோபர் 18 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அதேவேளை, கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனமானது தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தது.

**(உ) விசேட பணிக்கொடை**

எல்கேஎஸ் 19 (ஊழியர் நலன்கள்) இன் படி, வங்கி எந்தவொரு எதிர்காலக் கடப்பாட்டிற்குமாக போதியளவு நிதியேற்பாட்டை செய்தல் வேண்டும். இருப்பினும், விசேட பணிக்கொடை தொடர்பில் கணக்குகளில் எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொள்ளாது 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தினை பூரணப்படுத்திய அதன் ஊழியர்களிற்கு வழமையான பணிக்கொடைக்கு மேலதிகமாக 2007 முதல் விசேட பணிக்கொடையொன்றை வங்கி செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும் செலுத்தப்பட்ட தொகை மாத்திரம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மதிப்பாய்வு அறிக்கையின் படி, செலுத்தப்பட்ட விசேட பணிக்கொடையின் உண்மையான பொறுப்பு ரூபா 92,820,161 ஆக இருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 50 சதவீதம் அல்லது ரூபா 46,410,080 தொகையினை மாத்திரம் பொறுப்பாக காட்டியிருந்தது.

**(ஊ) ஊழியர் பங்கு மாற்றுவழித் திட்டம் (ஈஎஸ்பீஓ)**

நிதிக் கொடுக்கல்வாங்கல் ஒன்றின் தாக்கமின்றி தனியார் நிறுவனமொன்றினூடாக ஊழியர் பங்கு மாற்றுவழித் திட்டத்தின் (ஈஎஸ்பீஓ) கீழ்

ரூபா 49,838,646 தொகையால் பங்கு மூலதனத்தையும் ஏனைய சொத்துக்களையும் வங்கி அதிகரித்திருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 55.53 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திற்கு எதிராக ரூபா 158.01 மில்லியன் ஆன வரிக்கு முந்திய தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தமையால், அது வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் ரூபா 102.48 மில்லியன் அல்லது 182 சதவீத அதிகரிப்பைக் குறிக்கின்றது. முதலீட்டு ஆதனங்கள் மீது ரூபா 95 மில்லியன் மீள்மதிப்பீட்டு மிகை அங்கீகரிக்கப்பட்டமையே மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.2.1 நிதி விளைவுகளின் பொழிப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகளின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றது.

| விடயம் | 2013 | 2012 |
|---|---|---|
| | (ரூபா. மில்) | (ரூபா. மில்) |
| வட்டி வருமானம் | 3,528 | 2,635 |
| வட்டிச் செலவினம் | (2,469) | (1,805) |
| தேறிய வட்டி வருமானம் | 1,059 | 830 |
| தேறிய வட்டி வருமானம் | 275 | 109 |
| தேறிய வருமானம் | 1,334 | 939 |
| பதவியினர் கிரயம் | (586) | (458) |
| ஏனைய செலவினம் | (352) | (304) |

| | | |
|---|---|---|
| கடன் மற்றும் ஏனைய நட்டங்கள் மீதான சேதக் கட்டணங்கள் | (87) | (1) |
| **வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | 309 | 176 |
| பெறுமதிசேர் வரி | (78) | (50) |
| வரிச் செலவினம் | (73) | (70) |
| **ஆண்டிற்கான இலாபம்** | 158 | 56 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானமும் வட்டிச் செலவினமும் முறையே 33.89 சதவீதத்தாலும் 36.79 சதவீதத்தாலும் அதிகரித்திருந்த அதேநேரம் ஏனைய செலவினம் 34.34 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேநேரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டியல்லா வருமானம் 152 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்கான வட்டிச் செலவினம் மீதான தேறிய வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் 46 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 43 சதவீதமாகக் காணப்பட்டு 3 சதவீத வீழ்ச்சியை காட்டியது.

### 3.2.2 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கக் கூடியதாவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான முக்கியமான கணக்கீட்டு விகிதங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | % | % |
| (i) | தேறிய இலாப விகிதம் | 4.15 | 2.02 |
| (ii) | வட்டி வருமானத்திற்கு தேறிய வட்டி வருமானம் | 30.01 | 31.48 |
| (iii) | வட்டி வருமானத்திற்கு வட்டிக் கிரயம் | 69.99 | 68.52 |
| (iv) | தேறிய வட்டி வருமானத்திற்கு மேந்தலைச் செலவினம் | 88.55 | 91.86 |
| (v) | சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் | 0.65 | 0.27 |
| (vi) | உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் | 6.36 | 2.35 |
| (vii) | பங்கொன்றிற்கான உழைப்பு (ரூபா) | 2.44 | 0.86 |

| | | |
|---|---|---|
| **மூலதனப் போதுமை விகிதங்கள்** | | |
| (i) மொத்தச் சொத்துக்களிற்கு உரிமை மூலதனம் | 9.34 | 11.50 |
| (ii) கடன்களிற்கு உரிமை மூலதனம் | 49.04 | 74.40 |
| (iii) வரிசை i (சீபீஎஸ்எல் நியமம் 5%) | 17.74 | 23.75 |
| (iv) வரிசை ii (சீபீஎஸ்எல் நியமம் 10%) | 18.29 | 24.41 |
| **திரவச் சொத்து விகிதம்** | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் (ஆகக்குறைந்தது 20 சதவீதம்) | 28.74 | 22.65 |

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 நிதிகளின் கிரயம் மற்றும் விளைவு

| **விபரம்** | **திரண்ட கிரயம் மற்றும் வருமானத்தின் அடிப்படையில்** | | |
|---|---|---|---|
| | **சராசரி மீதி** ரூபா 000 | **கிரயம்/வருமானம்** ரூபா 000 | **வீதம்** % |
| **வைப்புக்கள்** | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 2,084,635 | 99,892 | 4.79 |
| நிலையான வைப்புக்கள் | 13,445,900 | 2,016,254 | 15.00 |
| ''தனனிதான'' | 402,418 | 44,228 | 10.99 |
| ஏனைய வைப்புக்கள் | 5,707 | 269 | 4.72 |
| **வைப்புக்களின் உப மொத்தம்** | **16,631,592** | **2,160,643** | **12.99** |
| **கடன் பெறல்கள்** | | | |
| வர்த்தகக் கடன் பெறல்கள் | | | |
| வங்கி மேலதிகப்பற்று | 67,901 | 1,119 | 1.65 |
| சந்தையிலிருந்தான கடன் பெறல் | 2,036,449 | 217,943 | 10.70 |
| **வர்த்தகக் கடன் பெறல்களின் உப மொத்தம்** | **2,104,350** | **219,062** | **10.41** |
| **ஏனைய கடன் பெறல்கள்** | | | |
| விசேட திட்டக் கடன்கள் | 1,060,985 | 37,482 | 3.53 |
| மீள்நிதியிடல் கடன்கள் | 991,864 | 52,081 | 5.25 |
| **ஏனைய வர்த்தகக் கடன் பெறல்களின் உப மொத்தம்** | **2,052,849** | **89,563** | **4.36** |

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பித்தல் மீதான நிதிக் கிரயம் | 18,735,943 | 2,379,705 | 12.70 |
| | | | |
| ஏனைய பொறுப்புகக்ள் | 2,888,175 | - | - |
| மூலதனம் | 962,093 | - | - |
| ஒதுக்கங்கள் | 1,519,289 | - | - |
| | 24,116,500 | 3,414,722 | 14.16 |
| கழிக்க: | | | |
| ஏனைய சொத்துக்கள் | 1,391,714 | - | - |
| நிதிக் கிரயம் | 22,724,785 | 2,469,268 | 10.87 |
| மேந்தலைக் கிரயம் | 22,724,785 | 1,035,017 | 4.55 |
| **மொத்த நிதிக் கிரயம்** | **22,724,785** | **3,504,285** | **15.42** |
| | | | |
| கடன் தொகுதி | 17,833,503 | 2,922,126 | 16.39 |
| முதலீடுகள் | 4,905,406 | 606,091 | 12.36 |
| நிதி விளைவு – செயலாற்றல் | 22,738,910 | 3,528,217 | 15.52 |
| | | | |
| எல்லை | 22,738,910 | 23,932 | 0.11 |
| பின்னூட்டல் அடிப்படை ஏனைய வருமானம் | 22,738,910 | 285,360 | 1.25 |
| **எல்லை** | **22,738,910** | **309,292** | **1.36** |
| | | | |
| வரி | 22,738,910 | 151,284 | 0.67 |
| **தேறிய எல்லை** | **22,738,910** | **158,008** | **0.69** |

எச்டீஎப்சீ வங்கியின் நிதிகளின் கிரயம் மற்றும் உழைப்பு அறிக்கையின் படி, மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு (கடன் மற்றும் முதலீடு) 15.52 சதவீதமாக காணப்பட்டதுடன் 2013 இன் சராசரி நிதி விளைவிற்கும் மேலாக 18 சதவீத வட்டியில் சீஈபீ சேமலாப நிதியத்திலிருந்து 1,700 மில்லியன் நிலையான வைப்பினை வங்கி பெற்றிருந்தது.

### 3.3.2 வங்கியின் முதிர்வுத் தொகுதி

மாதாந்த மட்டத்திலான வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தொகுப்புப் பகுப்பாய்வில் மொத்தப் பொறுப்புக்கள் அதிகளவில் மிகைத்துக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான 3 மாதங்கள் மற்றும் 3 – 12 மாதங்கள் வரையான குறுங்கால திரவத்தன்மை இடைவெளி முறையே ரூபா 4,703 மில்லியன் மற்றும் ரூபா 3,174 மில்லியன் மறைப் பெறுமதிகளாக காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

| | **3 மாதங்கள் வரை** | **3 முதல் 12 மாதங்கள்** | **1 முதல் 3 ஆண்டுகள்** | **3 முதல் 5 ஆண்டுகள்** | **5 ஆண்டுகளிற்கு மேலாக** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு | 101,867 | - | - | - | - | 101,867 |
| வங்கிகளிலிருந்து பெறவேண்டியவை | 166,223 | - | - | - | - | 166,223 |
| முதலீடுகள் | 4,304,569 | 1,941,389 | 87,313 | - | 31 | 6,333,302 |
| கடன்களும் முற்பணங்களும் | 1,112,307 | 1,545,735 | 4,749.714 | 4,138,321 | 8,155,262 | 19,701,339 |
| நிலையான சொத்துக்கள் | - | - | - | - | 289,537 | 289,537 |
| ஏனைய சொத்துக்கள் | 29,222 | 23,919 | 76,580 | 20,036 | 825,457 | 975,213 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **5,714,188** | **3,511,043** | **4,913,607** | **4,158,356** | **9,270,287** | **27,567,481** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த மூலதன நிதியம் | - | - | - | - | 2,575,222 | 2,575,222 |
| வைப்புக்கள் | 9,161,038 | 6,297,743 | 1,383,766 | 1,369,640 | 701,460 | 18,913,646 |
| கடன் பெறுகைகள் | 613,171 | 385,244 | 1,232,143 | 1,763,202 | 1,257,928 | 5,251,689 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனைய பொறுப்புகள் | 642,969 | 1,597 | 7,526 | 165,654 | 9,178 | 826,924 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **10,417,178** | **6,684,584** | **2,623,435** | **3,298,496** | **4,543,788** | **27,567,481** |
| **முதிர்ச்சி இடைவெளி** | **(4,702,990)** | **(3,173,541)** | **2,290,172** | **859,860** | **4,726,499** | **இல்லை** |

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரமான எனது அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் வங்கியின் தலைவியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முதலீட்டு ஆதனம்
(ஆ) நிதிக் கிரயம்
(இ) பிரேரிக்கப்பட்ட வருமான மூலங்களும் கடணமும்
(ஈ) கடன் நிர்வாகம்
(உ) கொள்வனவு வழிகாட்டல்கள்
(ஊ) மனித வள முகாமைத்துவம்